# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :29 January 2026*

கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

அரண்
Aran
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**
Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**
Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**
Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# நுண்கலை

# மிருதங்கம் கற்பிக்கும் முறைகளும், ஆசிரியருக்கான குண நலன்களும்

# *Mridangam Pedagogy and the Personal Qualities of a Teacher*

**ஆ.ராஜ் கமல்,**

ஆய்வு மாணவர், மிருதங்கத்துறை உதவிப் பேராசிரியர்,

கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

**முனைவர் வீ.வேங்கடலட்சுமி,**

ஆய்வு நெறியாளர், குரலிசைத்துறை இணைப்பேராசிரியர்,

கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

***A.Raj Kamal***,

*Research Scholar, Assistant Professor of Mridangam,*

*Kalai Kaviri College of Fine Arts, Trichy,*

***Dr V.Venkatalakshmi***,

*Research Supervisor, Associate Professor of Vocal Music,*

*Kalai Kaviri College of Fine Arts, Trichy,*

***Abstract***

*In musical concerts, accompanying instruments are of two types:* ***sruti instruments*** *and* ***laya (rhythmic) instruments****. Among them, the mridangam is a rhythmic instrument and is of prime importance in concerts. From ancient times to the present day, many experts and maestros in mridangam have flourished in India. The level of rhythmic sophistication seen in South India is rarely found elsewhere. There are numerous systematic methods of practice to attain proficiency in mridangam. It is essential that learners of mridangam understand these methods. Describing this necessity and the methods of teaching constitutes the focus of the present research paper.*

***Keywords:*** *Mridangam, divine instrument, qualities of a teacher, Panchatantra strategies, teaching methodology, dance*

**ஆய்வுச் சுருக்கம்**

இசைக்கச்சேரிகளில் பக்கவாத்தியங்களில் சுருதிவாத்தியம், லயவாத்தியம் என இருவகை உண்டு. அதில் மிருதங்கம் லயவாத்தியமாகும். இது இசைக்கச்சேரிகளில் முக்கியமானதாகும்.

மிருதங்கத்தில் வல்லுனர்களாகவும், மேதைகளாகவும் பலர் தொன்றுதொட்டே இந்தியாவில் விளங்கி வருகின்றனர். லயக்கலையில் தென்னிந்தியாவிற் காணப்படும் அளவிற்கு நுட்பச் சிறப்பு காணப்படவில்லையென்றே கூறலாம். மிருதங்கத்தில் நன்கு தேர்ச்சி பெறுவதற்குப் பல பயிற்சிவழிகள் உண்டு. இதனை மிருதங்கம் பயில்வோர் உணர்தல் அவசியம். அதன் அவசியம் மற்றும் கற்பிக்கும் முறையினை விவரிப்பதே இந்த ஆய்வுக் கட்டுரையாகும்.

**திறவுச்சொற்கள்:** மிருதங்கம், தேவ வாத்தியம், குணநலன்கள், பஞ்ச தந்திர யுக்திகள், கற்பிக்கும் முறை, நாட்டியம்

**முன்னுரை**

இந்திய இசை மரபில் தாள வாத்தியங்கள் முக்கிய இடம் பெற்று வருகின்றன. அவற்றில் மிருதங்கம் தனித்துவம் வாய்ந்த தொன்மையான தேவவாத்தியங்களில் ஒன்றாகும். வரலாற்றுக் கருவிகளுள் வீணா வேணு, மிருதங்கம் என்பன அதிமுக்கியமான இசைக்கருவிகள் ஆகும். இசைக்கருவிகளுள் தோற்கருவிகள் வகையைச் சேர்ந்த இசைக்கருவியாகும். உலகில் உள்ள அனைத்து உயிரினங்களையும் தனது இசைச்சக்தியால் இறைவனுடன் இசைவுபடச் செய்ய வல்ல ஓர் சக்தி பொருந்திய வாத்தியமாகும்.

**மிருதங்கம் - பெயர் வரலாறு**

இது மத்தளம், தண்ணுமை, முழவு என அழைக்கப்படுகின்றது. ஆனந்தவாத்தியம், நந்திவாத்தியம், போன்ற காரணப்பெயராலும் காலத்திற்கேற்ப அழைக்கப்பட்டு வருகிறது. மிருதங்க வாத்தியமானது வாசிக்கப்படும் போது மிருதுவானதாகவும், மிருதுவான நாதத்தைக் கொடுக்கின்ற காரணத்தினாலும், மேலும் மிருத்தினால் (மண்ணினால்) செய்யப்பட்டு சாதம் என்னும் பகுதியினைப் பிரதானமாகக் கொண்டிருப்பதாலும் மிருதங்கம் என்னும் பெயரைப் பெறுகிறது.

இசை எனப்படுகிற நாத ஒலிகள் அனைத்திற்கும் ஆதாரமாக, நிலம்போல அமைவதால் மத்தளம் எனவும் அழைக்கப்பட்டது. மத்து என்பது ஓசை, இசை, ஒலி எனப்படும். தளம் என்பது நிலம் எனவும் பொருள்படும். எனவே மத்து + தளம் என்பது மத்தளம் எனப் பெயர் பெற்றது. இதைவிட இவ்வாத்தியத்தின் அமைப்பிலே மும்மூர்த்திகளாகிய பரமேஸ்வரன், விஷ்ணு, பிரம்மா, ஆகியோர் இருப்பதால் ம-த-ள என்னும் மூர்த்திகளைக் குறிக்கும் அட்சரங்கள் சேர்த்து மதள எனவும் இவை சொல்லழகிற்காக மெய் எழுத்தின் சேர்க்கையினால் மத்தளம் எனவும் பெயர் பெற்றது. அத்துடன் இரு கைகளிலும் அடித்து வாசிக்கப்படுவதனால் மர்த்தனம் என்பது மத்தளம் என்றும் பெயர் பெற்றது.

மேலும் இதனுடைய நாதமானது தண்மை பொருந்திய நாதமுடையதால் தண்ணுமையெனவும், நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவத்தின் போது நந்தியம் பெருமான் மஹாவிஷ்ணு, உமாதேவியார் ஆகியோரால் வாசிக்கப்பட்டமையால் ஆனந்தவாத்தியம், நந்திவாத்தியம் எனவும் அழைக்கப்படலாயிற்று.

இவ்வாத்தியம் ஆரம்பத்தில் கூத்துவகைகளில் பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டது. அத்துடன் கோவிற்கிரியைகளில் தாளங்கள், நிருத்தங்கள் என்பவற்றை வெளிப்படுத்தவும் உபயோகப்படுத்தப்படுகிறது. தற்காலத்தில் இசையரங்குகளிலும், நடன அரங்குகளிலும், பண்ணிசை அரங்குகளிலும், கதாகாலக்ஷேபங்களிலும் பக்கவாத்தியமாக அங்கம் வகித்தும், நிகழ்ச்சியில் லயங்களில் காலப்பிரமாண நிர்ணயம் செய்தும் லயவாத்தியம் என்னும் பெயருடன் திகழ்கிறது.

**நாட்டியத்தில் மிருதங்கம்**

நாட்டிய இசை அரங்குகளில் மிருதங்கம் முக்கியத்துவம் வாய்ந்த கருவியாகும். இக்கருவி முற்காலத்தில் முட்டு எனவும் அழைக்கப்பட்டது. அதுபோலவே நட்டுவாங்கம் செய்யும் நட்டுவனார் தட்டுக்காரன் எனவும் அழைக்கப்பட்டனர். இதற்கு சான்றாக மிருதங்க வித்வான்கள் வாழ்ந்து வந்த தெருக்கள் '**முட்டுக்காரன் தெரு**' எனவும் நட்டுவனார்கள் வாழ்ந்த தெருக்கள் '**தட்டுக்காரன் தெரு**' எனவும் பெயர் பெற்றிருந்தது.

**தேவ வாத்தியம்**

இது போலவே மூர்த்திகளில் ஒருவராகிய மஹாவிஷ்ணு மிருதங்கம் வாசித்த வரலாற்றினால் **மத்தள நாராயணன், மத்தள மாதவன்** என்னும் சிறப்பு பெயரும் பெற்றுள்ளார். மிருதங்கத்தின் அமைப்பானது வட்டவடிவினையுடையது. '**ஓம்**' என்கின்ற வட்டவடிவுடைய பிரணவமே நாதங்களில் முதன்மையானது. ஓசை, ஒலிகள் யாவும் '**ஓம்**' எனும் ஒலியின் பிரதிபலிப்பேயாகும் என்பது இசை ஆராய்ச்சியாளர்களின் கூற்றாகும். அதற்கேற்பவே மிருதங்கத்தின் தோற்றம் அமைந்துள்ளது, இதுபோலவே இதில் எழுகின்ற நாதமும் ஓங்கார வடிவிலேயே விரிவடைகிறது. இதனால் உலகின்கண் அனைத்து உள்ளங்களையும் ஈர்க்கின்ற சக்தியை உருவாக்குகின்றது.

இதனுடைய நாதமானது சுகம் பொருந்தியதாகவும் இவ்வாத்தியமானது இன்றைய இசையுலகில் வகிக்கும் இடமானது மிக உயர்ந்ததாகும். இந்த வாத்தியத்தினைப் பற்றி ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் **"சொகசுகா மிரு தங்கதாளமு"** என்னும் கீர்த்தனையில் எடுத்துக்

கூறியுள்ளார். அம்பிகைக்கு பிரியமானதான இவ்வாத்தியத்தின் பெருமையை மதிப்பிடுமளவுக்கு **"வீணா வேணு மிருதங்கர ஸிகா"** என தேவிமஹாத்மியத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

உலக நடைமுறை சூரிய, சந்திர, தேவர்களால் இயக்கப்படுவதுபோலவே இவ்வாத்தியத்தின் வலந்தலைப்பகுதி சூரியன் போன்றதாகவும் இடந்தலைப்பகுதி சந்திரன் போன்றதாகவும் அமைப்பு, நாதம் போன்றவற்றில் நிரூபித்துக்காட்டப்படுகிறது. மேலும் சூரிய, சந்திரர்கள், ராகு, கேது என்னும் கிரகங்களின் சேர்க்கையினால் எவ்வாறு பலம்பெறுகின்றனவோ அவ்வாறே வலந்தரை, இடந்தரை என்னும் பாகங்களும் ராகு கேது என்னும் இரண்டு சாட்டைவார்களினாலே பின்னப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன.

நாதசக்தி என்பன ஒருங்கே அமையப்பெற்ற இந்த இசைக்கருவியானது ஆதியில் தேவர்களாலும், பின்னர் முனிவர் பரம்பரையினராலும், 18ம் நூற்றாண்டுப் பகுதியில் நாராயணசாமி அப்பா, துக்காரம் சுவாமிகள் போன்றவர்களாலும் பின்னர் தெஷிணாமூர்த்திப்பிள்ளை, தஞ்சாவூர் வைத்தியநாதஐயர், ராமதாஸ்ராவ், பாலக்காடு மணிஐயர், பழனி சுப்பிரமணியம் பிள்ளை போன்றவர்களாலும் 19, 20 ஆம் நூற்றாண்டுப்பகுதியிலும், தற்போதும் இவர்களின் குருபரம்பரை வழிவந்த கலைஞர்களாலும் மெருகூட்டப்பட்டுப் பெருமைமிக்கதோர் அரிய வாத்தியமாகப் போற்றப்படுகின்றது.

**மிருதங்க ஆசிரியருக்கு இருக்க வேண்டிய குணநலணங்கள்**

ஒரு மிருதங்க ஆசிரியருக்கு முக்கியமாகக் கல்வியறிவு, கற்றபடியொழுகல், மாணவரின் நிலையறிந்து கற்பித்தல் ஆகிய மூன்று குணங்களும் இன்றியமையாகும். ஆசிரியருக்குரிய குணங்கள் பின்வருமாறு

பாடம் கற்பிக்கும் ஆற்றல், எளிதில் விளங்க வைக்கும் திறமை, மாணவர்களைத் தகுதியுள்ளவர்களாக உருவாக்குதல், மாணவர்களுக்கு உற்சாகமளித்தல், தம்மை விட அறிவு கூடியவர்களை சிறியவராயினும் ஆதரித்தல், மற்றவர்களிடம் பல தரவுகளை ஆராய்ந்து அவற்றினை மாணவர்களுக்கு கற்பித்தல், ஆசிரியரும் தினமும் பயிற்சி செய்தல் ஆகியவைகள் இதில் அடங்கும். இதனைவிட நல்ல மாணவர்களைத் தயார் செய்தல், நல்ல இசையினை வழங்கல், நேரத்தை வீணாக்காமல் குறித்து வேளையிற் குறித்த வேலைகளை வெற்றியுடன் முடித்தல், என்பன ஆசிரியர்களின் அதிமுக்கிய பொறுப்பாகும். முதலிலே மாணவனுக்கு மிருதங்கக் கலையில் உள்ள ஆர்வத்தினை, ஆற்றலை, நன்கு அறிந்து கொண்டும், மாணவனுக்குக் கையானது வாத்தியத்தில் நன்கு பதியும் வண்ணம் பாடங்களைத் தயார்செய்தும் பயிற்சி அளிக்க வேண்டும். மிருதங்கத்துக்குரிய சொற்கட்டுகளைப் பயிற்றுவிக்கும் பொழுது அவற்றிற்குரிய சரியான உச்சரிப்புடன் உச்சரித்து அவற்றிற்குரிய அளவுகளுடன் பயிற்றுவிப்பது

இன்றியமையாதது. மேலும் மாணவர்களைத் தயார் செய்யும்போது மாணவர்கள் மனம் தளராதவகையில் பஞ்சதந்திர யுக்திகள் அடிப்படையில் பயிற்றுவிப்பது அவசியம்.

**பஞ்சதந்திர யுக்திகள்**

பஞ்சதந்திரம் என்பது ஐந்துவகையான வழிமுறைகளாகும். அவை மத்ஸிய தந்திரம், கூர்ம தந்திரம், பிரமர தந்திரம், மார்ஜார தந்திரம், மர்க்கட தந்திரம் என்னும் ஐந்து வகையாகும்.

**1. மத்ஸிய தந்திரம்**

நீரில் வாழும் மீனானது தனது முட்டைகளைப் பார்க்கும் பார்வையின் தன்மையினாலேயே அம்முட்டைகள் குஞ்சுகளாக மாற்றமடைந்து தாய்மீனைப் போன்றே உருவாக முயற்சி செய்யும். இதேபோலவே குருவானவரும் மாணவனிடத்தில் கருணையான பார்வை கொண்டு மாணவனையும் தன்னைபோல தகுதி உடையவனாக உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

**2. கூர்ம தந்திரம்**

நீரில் வாழுகின்ற ஆமை தனது முட்டையை நீருக்கு வெளியே சென்று கரையில் உள்ள மணலில் முட்டையிட்டு தான் நீரிலேயே வாழுகின்றது. இவ்வேளையில் இவற்றிற்கு இடையேயுள்ள ஓர் உணர்வு சக்தியினால் முட்டை ஆமைக் குஞ்சுகளாக மாற்றம் பெற்றுத் தானாகவே நீருக்குள் தாயிடம் சென்றடைவது போல், ஆசிரியரும் மாணவனைத் தனது பார்வையின் உணர்வினால் தன்னை போலவே மாணவனையும் உருவாக்க வேண்டும்.

**3. பிரமர தந்திரம்**

வண்டு இனமாகிய குளவியானது எங்கிருந்தாவது ஓர் புழுவினை எடுத்து தனது வாயினால் கொட்டிக் கொட்டித் தனது சிந்தனையை அப்புழுவிற்கு எழச்செய்து படிப்படியாக அதனைத் தனது உருவத்தைப் பெறச்செய்வது போல, ஆசிரியரும் தனது சொற்களினாலும், செய்கையினாலும் மாணவனை தன்னைப் போல தகுதி வாய்ந்தவனாக உருவாக்க வேண்டும்.

**4. மார்ஜார தந்திரம்**

பூனை தனது குட்டிகளைத் தான் செல்லுமிடமெல்லாம் வாயினால் கவ்வி எடுத்துச்சென்று அவற்றை தன்னைப் போலவே உருவாக்குவது போல, ஆசிரியரும் தான் செல்லும் இசை தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் மாணவனை அழைத்துச் சென்று அங்குள்ள இசை சூழலுக்கு ஏற்ப மாணவனின் பழக்கவழக்கங்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

**5. மர்க்கட தந்திரம்**

தாய்க்குரங்கு தனது குட்டியினை வயிற்றினில் பற்றிப் பிடித்திருக்கும்போது மரத்திற்கு மரம் தாவிப்பாய்கிறது. இந்த நிலையில் தனது குட்டி தான் இடத்திற்கு இடம் தாவும் பொழுது விழுந்துவிடும் என்பது பற்றிச் சிந்திக்காது செயல்படுவது போன்றே, ஆசிரியரும் தனது அருகிலிருக்கும் மாணவன் நிலைபற்றிச் சிந்திக்காமலே பாடம் கற்பித்தலும் மாணவன் விரும்பும் நேரத்தில் பாடங்களைச் சொல்லிக் கொடுத்தும் மாணவனைத் தயாரித்தல்.

**மிருதங்கம் கற்பித்தல் முறையில் கவனிக்க வேண்டியவைகள்**

- புதிதாக ஒரு மாணவனுக்கு மிருதங்கம் கற்பிக்கும்போது, அம்மாணவனுக்கு இக்கலையில் ஏற்கனவே ஆர்வம் உண்டா என்பதை உளச்சார்பு மூலம் ஆசிரியர் தெரிந்து கொள்வது அவசியம்.
- தான் கற்பிக்க எடுத்துக் கொண்ட இசைக்கருவியினைப் பற்றிய விவரங்களை மாணவனுக்கும் கற்பிக்க வேண்டும்.
- மாணவன் இசைக்கருவியினை எளிதாக வாசிப்பதற்கு ஏற்றவகையில் மிருதங்கத்தை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.
- கைகளை இலகுவாக அசைக்கக் கூடியமுறையில் எளிமையாக வைத்திருக்கும்படி செய்தல், பின்னர் கற்பிக்க வேண்டிய சொற்கட்டுகளை மாணவனுக்கு எழுதிக் கொடுத்தும், அவற்றை உரிய உச்சரிப்புகளுடன் சொல்லிக் கொடுத்தும், அவைகளை வாசிக்கும் முறைகளை கைகளால் இசைத்து காண்பித்தும், அதனை மாணவன் சரிவர அவற்றிற்குரிய இடங்களில் விரல்கள் மிருதங்கத்தில் பதியும்படியும், உரிய நாதம் உண்டாகும் வண்ணம் கற்பிப்பது மிக முக்கிய கடமையாகும்.

கற்றுக்கொடுத்தப் பாடத்தினை ஒரு காலத்திலாவது மாணவன் அவற்றிற்கான கையமைப்புக்களுடன் வாசிக்கத் தகுதியுடையவனாகும் அளவிலே மாணவனுக்குத் தாள சம்பந்தமான குறிப்புக்களைக் கற்றுக் கொடுத்தும், மாணவனைத் தாளம் போடச் செய்தும், கற்றுக் கொடுத்த பாடத்தினைத் தாளத்துடன் கொனுப்பிக்கச் செய்ய வேண்டும். இப்படி கொனுப்பித்த பாடத்தினை அதன் அடிப்படையிலேயே மிருதங்கத்திலும் வாசிக்கச் செய்து படிப்படியாகக் காலங்களை (விளம்பித, மத்திம மற்றும் துரித காலங்களில்) மாற்றி வாசிக்கச் செய்தும், அனைத்துப் பாடங்களையும் இதே முறையிலேயே கற்பிக்க வேண்டும்.

இது மட்டுமல்ல மேலும் மேலும் மாணவனுக்கு ஆர்வ மூட்டும் வகையில் இசைக்கருவியினை தான் வாசித்துக் காண்பித்தும், கலைஞர்களின் படங்களையும், கலைசம்பந்தமான இசைக்கச்சேரிப் படங்களையும் காண்பித்தலும் அவசியமாகின்றது.

ஒவ்வொரு புதுப்பாடத்தின் போதும் பழைய பாடங்களை நினைவுபடுத்தி இசைக்கச் செய்வது அவசியம்.


பாடங்களைக் கற்றுக் கொடுக்கும்போது ஒவ்வொரு புதிய பாடங்களையும் பழைய பாடங்களுக்குத் தொடர்புடையனவாக அமைத்தல் அவசியம், புதிய பாடத்தில் ஏதாவது கடினமான பகுதிகள் வரவிருப்பின், அக்கடினமான பகுதிகளை மட்டும் முதற் காலத்தில் கற்றுக்கொடுப்பது மாணவனுக்கு பலனளிக்கும். மாணவனுக்கு இலகுவாகப் புரியும்படியாக முதலில் சதுஸ்ரமும், பின்னர் திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீர்ணம் ஆகிய ஜாதிகளின் அடிப்படியில் கற்பிக்க வேண்டும்.

**இணைய வழியில் மிருதங்கம் கற்பித்தல்**

Zoom, Google Meet, WhatsApp போன்ற இணைய வழி தொடர்பு தளங்கள் மிருதங்கம் கற்பித்தலில் ஒரு முக்கியமான நவீன மாற்றமாக உருவெடுத்துள்ளன. இம்முறையில் நேரடி (Live) வகுப்புகள் மூலம் குரு மற்றும் மாணவர் நேருக்கு நேர் தொடர்பு கொண்டு பயிற்சி பெற முடிகிறது. அதே நேரத்தில் இணைய வகுப்பில் பதிவு செய்யப்பட்ட (Recorded) பாடங்கள் மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் பார்த்து பயிற்சி செய்யும் வாய்ப்பையும் வழங்குகின்றன. வாரம் அல்லது மாதம் அடிப்படையிலான வகுப்புகள் மூலம் கற்றல் முறையான ஒழுங்குடன் நடைபெறுகிறது. கற்பித்தலில், குரு நேரில் பயிற்றுவிப்பது போல விளக்கி, மாணவர் வாசிப்பை உடனடியாகக் கவனித்து திருத்துகிறார். தனிப்பட்ட (One-to-One) வகுப்புகள் மூலம் மாணவரின் தனிப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்படுகின்றன. அதே சமயம் குழு வகுப்புகள் மாணவர்களுக்கு ஒற்றுமையான பயிற்சி சூழலை உருவாக்குகின்றன. இவ்வகை இணைய வழி கற்பித்தல் முறையின் முக்கிய பயன், இடம், நாடு, நேரம் போன்ற கட்டுப்பாடுகள் இல்லாமல் கற்றல் சாத்தியமாகின்றது. இதன் மூலம் வெளிநாட்டு மாணவர்களுக்கும் மிருதங்கக் கல்வி எளிதில் கிடைக்கிறது. மேலும் வகுப்புகளை மீண்டும் பார்த்து பயிற்சி செய்யும் வசதி மற்றும் ஆசிரியரின் கற்பித்தல் வீடியோக்கள் ஒரு Digital Archive ஆக உருவாகும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

***தாள ஆப்ஸ்***




*மெட்ரோனம் மற்றும் தாள ஆப்ஸ் ஆகியவை நவீன மிருதங்கக் கற்பித்தலில் லய நிர்ணயத்தை வளர்க்கும் மிக முக்கியமான கருவிகளாக விளங்குகின்றன. Digital Metronome மூலம் ஒவ்வொரு மாத்திரைக்கும் சமமான நேர இடைவெளி கிடைப்பதால், மாணவர் தாளத்தை விட்டு நழுவாமல் வாசிக்கும் பழக்கம் உருவாகிறது. தாள ஆப்ஸ் (ஆதி, ரூபகம், மிஸ்ர சாபு போன்றவை) தாளத்தின் அங்கங்கள், கால அமைப்பை ஒலியுடன் வெளிப்படுத்துவதால், தாள கட்டமைப்பு மனதில் தெளிவாகப் பதியும். கற்பித்தலில் முதலில் மெதுவான வேகத்தில்(BPM-ல்) கோர்வைகளை பயிற்சி செய்ய வைத்து, ஒவ்வொரு சொல்லும், கை அழுத்தமும், நாதத் தெளிவும் சரியாக அமையச் செய்யப்படுகிறது. அதன் பின்னர் படிப்படியாக வேகம் உயர்த்தப்படுவதால், அவசரம் இல்லாத துல்லியமான வாசிப்பு பழக்கம் உருவாகிறது. முதல் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம் என காலப்பிரமாண பயிற்சிகள் மேற்கொள்ளும்போது, மெட்ரோனம் வேகக் கட்டுப்பாட்டாக இருந்து, லயம் மாணவரின் உள்ளார்ந்த உணர்வாக மாறுகிறது. இவ்வாறு தொடர்ந்து மெட்ரோனம் மற்றும் தாள ஆப்ஸ் உதவியுடன் செய்யப்படும் பயிற்சிகள், கோர்வைகள் சரியாக சமத்தில் முடியும் திறன், ஒரே வேகத்தில் நீண்ட நேரம் வாசிக்கும் நிலைத்தன்மை மற்றும் தாள நிர்ணயத்தை வளர்க்கின்றன.*

***முடிவுரை***

*மிருதங்கம் என்பது வெறும் தாள வாத்தியமல்ல, அது இந்திய இசை மரபின் அடையாளமாகவும் தெய்வீக உணர்வுகளோடு இணைந்த ஆன்மிக வாத்தியமாகவும் விளங்குகிறது. நாட்டிய இசை, ஆலயச் சடங்குகள், கச்சேரிகள் எனப் பல்வேறு தளங்களில் மிருதங்கம் கலை, கலாசாரம், ஆன்மிகம் ஆகியவற்றை ஒருங்கே இணைக்கும் பாலமாக*

செயல்படுகிறது. மிருதங்கம் கற்பித்தல் முறையில் மாணவரின் மனநிலையை அறிதல், சரியான உச்சரிப்புடன் சொற்கட்டுகளைப் பயிற்றுவித்தல், தாள அறிவும், லய உணர்வும் உருவாக்குதல், பஞ்சதந்திரக் கல்விமுறையைப் பயன்படுத்துதல் என்ற அம்சங்கள் முக்கியமாகின்றன. ஒரு சிறந்த மிருதங்க ஆசிரியர் ஆழ்ந்த கல்வியறிவும், பொறுமையும், மாணவரை ஊக்குவிக்கும் திறனும், கொண்டவராக இருக்க வேண்டும். இத்தகைய குணநலன்களுடன் பயிற்சி அளிக்கப்படும் போது, திறமையான மிருதங்கக் கலைஞர்கள் உருவாகுவதோடு, இசைமரபும் உறுதியாகப் பரம்பரியம்மிக்கதாகத் தொடரும் என்பது திண்ணம்.

**துணை நின்ற நூல்கள்**


1. கே. ஏ பக்கிரிசாமிபாரதி— 2002 — இந்திய இசைக்கருவூலம், குசேலர் பதிப்பகம், சென்னை.
2. P.T. செல்லத்துரை — 1984 - தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.
3. அ.நா.சோமாஸ் கந்த சர்மா - மிருதங்க சங்கீத சாஸ்திரம் — திருகணித அச்சகம், இலங்கை
4. **கோபால், ஸ்ரீஜயந்தி.** - *மிருதங்கம்: ஒரு இந்திய சாஸ்திரிய தாளவாத்யம்.*- பி.ஆர். ரிதம்ஸ், 2004.
5. **கிருஷ்ணா, டி. எம்.** - *செபாஸ்டியன் அண்டு சன்ஸ்: மிருதங்கம் தயாரிப்பாளர்களின் சுருக்கமான வரலாறு,* கான்டெக்ஸ்ட், 2015.
6. **தர்மலா ராமமூர்த்தி.**- *மிருதங்கம் :கோட்பாடும் நடைமுறையும்,* ஆந்திரப் பிரதேசம்.


## *Bibiliography*


1. ***K. A. Bhagirisaamibharathi*** — 2002. ***Indian Musical Instruments***. *Kuselar Publications, Chennai.*
2. ***P. T. Chellathurai*** — 1984. ***South Indian Musicology***. *Vaigarai Publications, Dindigul.*
3. ***A. Na. Soma Skanda Sharma*** — ***Mridanga Sangeetha Shastram***. *Tiruganitha Press, Sri Lanka.*
4. ***Gopal, Shreejayanthi*** — ***Mridangam: An Indian Classical Percussion Instrument***. *B. R. Rhythms, 2004.*
5. ***Krishna, T. M.*** — ***Sebastian and Sons: A Brief History of Mridangam Makers***. *Context, 2015.*
6. ***Dharmala Ramamurthy*** — ***Mridangam: Theory and Practice***. *Andhra Pradesh.*

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com